# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை- 600 032.
முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)
*******

**மனு எண். 200/நகராட்சி/2019**
**நாள் : 22/02/2019**

**திரு A.M. முபாரக் அலி,**
**திண்டுக்கல்.** – முறையீட்டு மனுதாரர்

**நகராட்சி ஆணையர்,**
**ஒட்டன் சத்திரம் நகராட்சி.** – எதிர் மனுதாரர்

திண்டுக்கல், வார்டு எண்.15, ஆண்டாள் நகர், இரண்டாவது தெரு, 49/2 கதவு எண்ணிட்ட முகவரியில் வசிக்கும் திரு A.M. முபாரக் அலி அவர்களின் 14.02.2019 நாளிட்ட மனு, இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு, பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

திண்டுக்கல், வார்டு எண்.15, ஆண்டாள் நகர், இரண்டாவது தெரு, 49/2 கதவு எண்ணிட்ட முகவரியில் வசிக்கும் திரு A.M. முபாரக் அலி என்பவர் தனது 13.11.2018 நாளிட்ட முறையீட்டு மனுவில் ஒட்டன் சத்திரம் நகராட்சி ஆணையர் திரு இளவரசன் மற்றும் அந்நகராட்சி அலுவலர் திரு சுலைமான் ஆகியோர் மீது புகார்களைத் தெரிவித்து உரிய நடவடிக்கை எடுக்கக் கோரி இம்முறைமன்ற நடுவத்தில் முறையீடு செய்திருந்தார். மேற்குறிப்பிட்ட முறையீட்டு மனுவினைப் பரிசீலித்த இம்முறைமன்ற நடுவர், மனுதாரரின் குற்றச்சாட்டுகளில் பொருள் எதுவும் இல்லை எனக் கண்டுணர்ந்ததால், ரூபாய்.5,000/- (ரூபாய் ஐந்தாயிரம் மட்டும்) செலவினமாக அவர் வசிக்கும் திண்டுக்கல் மாநகராட்சியில் செலுத்த வேண்டுமென 28.01.2019 நாளிட்ட இம்முறைமன்ற நடுவ ஆணை எண்.231/18-இல் மனுதாரருக்கு அறிவுறுத்தி ஆணையிடப்பட்டது. மேற்படி ஆணையை ரத்து செய்ய வேண்டி 14.02.2019 நாளிட்ட மனுவினை சமர்ப்பித்துள்ளார்.

2. முறையீட்டு மனுதாரர் ஒருவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் தாக்கல் செய்த முறையீட்டு மனு சம்பந்தமாக, இம்முறைமன்ற நடுவம் பிறப்பித்த ஆணை ஒன்றினை மறுபரிசீலனை செய்வதற்கு, 2014-ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டப்பிரிவுகள் மற்றும் மேற்குறிப்பிட்ட சட்டத்தின் கீழ் வகுத்துரைக்கப்பட்ட விதிகளில் வழிவகை எதுவும் செய்யப்பட வில்லை. மேலும், மனுதாரரின் 13.11.2018 நாளிட்ட முறையீட்டு மனுவினை முறையாகப்

பரிசீலித்தபின்பே சேவைத் தொகை ரூ.5000/– செலுத்த ஆணையிடப்பட்டுள்ள நிலையில் மேற்படி ஆணையை ரத்து செய்யக்கோரும் மனுதாரரின் கோரிக்கையினை ஏற்பதற்கில்லை எனத் தெரிவித்து அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

2019–ஆம் ஆண்டு, பிப்ரவரி திங்கள், 22–ஆம் நாளன்று, என்னால் கையொப்பமிட்டு, அலுவலக முத்திரையிட்டு இவ்வாணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்.

பெறுநர்

1. திரு.A.M. முபாரக் அலி,
எண்.49/2, ஆண்டாள் நகர் 2–வது தெரு,
வார்டு எண்.–15,
S.M.B. பள்ளி பின்புறம்,
திண்டுக்கல் – 624 005.

2. மாநகராட்சி ஆணையர்,
திண்டுக்கல் மாநகராட்சி
திண்டுக்கல்,
திண்டுக்கல் மாவட்டம்.

3. நகராட்சி ஆணையர்,
ஒட்டன் சத்திரம் நகராட்சி,
திண்டுக்கல் மாவட்டம்.

நகல் : முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்
பிரிவு அலுவலர் (நிர்வாகம்)
பேரூராட்சி பிரிவு – 3
இ.கோ. / உதிரி